# ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !

## முதல் பக்கத் தொடர்ச்சி

எங்கள் மேல் பொய் பரப்புபவர்களுக்கு பதிலடி கொடுப்பது மாதிரி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில் களில் குடமுழுக்கு நடத்தியிருக்கிறோம். மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறோம்.

### இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு!

இவை எல்லாவற்றிற்கும் மேல், இந்த ஆட்சியே மகளிர் மற்றும் மாணவர்களுக்கான ஆட்சி என்று சொல்லும் அளவிற்கு ‘திராவிட மாடல்’ அரசின் முத்திரைத் திட்டங்கள் எல்லாமே அவர்களுக்காகதான் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதில் சிலவற்றை மட்டும் நான் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப், காலை உணவுத் திட்டம், தோழி விடுதிகள் என நிறைய இருக்கிறது. என்னால் உறுதியாக சொல்ல முடியும், இத்தனை முத்திரைத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தும் வேறு மாநில அரசு இந்தியாவிலேயே நிச்சயமாக இருக்க முடியாது. சிறிய குளறுபடி, குழப்பம் கூட இல்லாமல், தேவையானவர்களுக்கு கிடைப்பது மாதிரி சரியாக செயல்படுத்தி வருகிறோம்.

இதையெல்லாம் யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. எல்லாமே Concrete Development! அதனால்தான் கண்கூடாக பார்க்கலாம் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். அடுத்து நம் பர்ஸ்-க்கு வருகிறேன்.

நாங்கள் இப்படி All Rounder-ஆக அடித்து ஆடுவதால்தான், இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலம் தமிழ்நாடு என்று ஒன்றிய பா.ஜ.க. அரசே பாராட்டி சொல்லியிருக்கிறது. நம்பர் ஒன் மாநிலம் மட்டுமல்ல; இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய ‘One and Only’ மாநிலமும் நம்முடைய தமிழ்நாடுதான். பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்ல; Human Development Index-லும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்பதுதான் எங்களின் பெருமைக்குரிய தனித்தன்மையாக விளங்கிக்கொண்டிருக்கிறது!

### நெருக்கடியை மீறி சாதித்திருக்கிறோம்!

இந்தியா முழுவதும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில், அதாவது டபுள் எஞ்சின் என்று அவர்கள் சொல்லும் டப்பா எஞ்சின் ஓடும் மாநிலங்களில் இப்படி ஒரு வளர்ச்சியை காட்டிட முடியுமா? முடியவே முடியாது! அவர்கள் செய்வதெல்லாம் வன்முறை, வெறுப்பு பேச்சு, பிற்போக்குவாதம். இதற்கு அப்படியே நேர்மாறான, முற்போக்கு அரசு எங்கள் ‘திராவிட மாடல்’ அரசு.

முக்கியமாக நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டியது, நாங்கள் செய்த சாதனைகளையெல்லாம் ஒன்றிய அரசின் உதவி இல்லாமலேயே சாதித்திருக்கிறோம். இன்னும் சொல்ல போனால் அவர்களின் நெருக்கடிகளை மீறி சாதித்திருக்கிறோம்.

2021-ஆம் ஆண்டிலேயே பத்தாண்டுகளுக்கான Vision-னோடுதான் நான் வந்தேன். ஸ்டாலினின் ஏழு உறுதிமொழிகள் என்று 2031 வரைக்குமான தொலைநோக்கு குறிக்கோள்களை சொல்லிவிட்டுத்தான் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றேன். நான் நினைத்ததை விட, அதிக வேகத்தில் அதைநோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். அண்மையில் வெளியான மாநில பொருளாதார ஆய்வறிக்கையும் அதைத் தான் சொல்கிறது.

“தமிழ்நாடு இதே வளர்ச்சியை தக்க வைத்துக்கொண்டால், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடையும்” என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். அதனால், என்னுடைய Vision-யை Reality-ஆக மாற்றுவதற்கு, அடுத்த 5 ஆண்டுகளும், இதே ‘Mission Mode’-இல் நாங்கள் உழைப்போம். என்னை பொறுத்தவரை, மக்களின் தேவையறிந்து திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறேன். மக்கள் சொல்லும் குறைகளை மட்டுமல்ல; எதிர்க்கட்சிகள் சொல்லும் குறைகளையும் காது கொடுத்து கேட்டு அதை சரி செய்கிறேன்.

> ❖ ஒன்றிய அரசின் நெருக்கடிகளை மீறி சாதனைகளைச் சாதித்திருக்கிறோம்.
>
> ❖ தி.மு.க. ஆட்சி என்றால் வளர்ச்சி! வளர்ச்சி என்றால் தி.மு.க. ஆட்சி!
>
> ❖ தேர்தல் நேரத்தில் பொய் மூட்டைகளை அள்ளி வீசுகிறார் பிரதமர் மோடி!
>
> ❖ யாருக்கு யார் தலைமை என்று கூட தெரியாத ஒரு கூட்டணி!
>
> ❖ மதுரவாயல் – துறைமுகம் மேம்பாலப் பணிகளுக்குத் தடை போட்ட அ.தி.மு.க.

நேற்று மதுரை வந்த பிரதமர் மோடி அவர்கள், மதுரவாயல் - துறைமுகம் மேம்பாலப் பணிகள் தாமதம் பற்றி குற்றம் சாட்டி அதை குறிப்பிட்டு பேசியிருக்கிறார். அவர் கூட்டணி வைத்திருக்கும் அ.தி.மு.க.தான் இந்த திட்டம் வரக்கூடாது என்று தடை செய்தார்கள். வழக்கிலும் வாதாடினார்கள். இந்த பணிகள் நாங்கள் வந்து, இந்த ஒன்றிய அரசிடம் சொல்லி இப்போதுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

### தேர்தல் நேரத்தில் பொய் அவிழ்ப்பு!

தி.மு.க. ஆட்சி என்றால் வளர்ச்சி! வளர்ச்சி என்றால் தி.மு.க. ஆட்சி! என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், பிரதமர் மோடி அவர்களுக்கு சொல்ல சாதனைகள் இல்லாததால், தேர்தல் நேரத்தில் பொய்யை அவிழ்த்துவிட்டிருக் கிறார்.

இதைவிட பெரிய காமெடியும் நேற்று மேடையில் அவர்கள் பேசும்போது நடந்தது. என்னவென்றால், பழனிசாமி அவர்கள் ‘அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும்’ என்று சொல்கிறார். அவரை மேடையில் வைத்துக்கொண்டே, பிரதமர் மோடி அவர்கள் ‘NDA ஆட்சி’ அமையும் என்று சொல்கிறார். யாருக்கு யார் தலைமை என்றே தெரியாமல் தான் இவர்கள் கூட்டணி இருக்கிறது.

அதனால்தான், நான் என்னுடைய பிரசாரத்தை தொடங்கியபோதே இந்த தேர்தல் ‘Tamil Nadu Vs NDA’ என்று தெளிவாகச் சொன்னேன்.

### தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? நிச்சயம் தமிழ்நாடு வெல்லும்!

இதை நான் சொன்னபோது சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், பிரதமர் மோடி அவர்களும் உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களும் ஒவ்வொருமுறை தமிழ்நாட்டிற்கு வரும்போதும் நான் சொன்னதை உறுதிப்படுத்தி செல்கிறார்கள்.

தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என்ற இந்த தேர்தலில் நிச்சயம் தமிழ்நாடு வெல்லும்! அந்த திராவிட மாடல் 2.0-வில் எங்கள் Record-யை நாங்களே Beat செய்வோம்!

இந்த இனிய நிகழ்ச்சியில் என்னுடைய கருத்துகளை பகிர்ந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருக்கும் ‘தி வீக்’ குழுமத்திற்கு நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## “தமிழ்நாடு தலைகுனியாது” தேர்தல் பரப்புரை!

# “All roads lead to Anna Arivalayam” - ஆங்கில நாளேடுகள் புகழாரம்!


**15 லட்சம் போடுவதாக சொல்லி ஏமாற்றினார் மோடி. சொல்லாமலே 5,000 ரூபாய் அள்ளிக் கொடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின் - அனல் பறந்த பரப்புரை.**

கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் “தமிழ்நாடு தலைகுனியாது” தேர்தல் பரப்புரைக் கூட்டமானது நேற்று 9 சட்டமன்றத் தொகுதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

கடலூர் தொகுதியில் கம்பம் செல்வேந் திரன், திருவொற்றியூர் தொகுதியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ஓசூர் தொகுதியில் கலாநிதி வீராசாமி, கெங்கவல்லி தொகுதியில் கோவி செழியன், பழனி தொகுதியில் திருமதி. கனிமொழி சோமு, திருவையாறு தொகுதியில் மருது அழகுராஜ், குளித்தலை தொகுதியில் ஏ.கே.எஸ். விஜயன், திருவாடானை தொகுதியில் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், பாளையங்கோட்டை தொகுதியில் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டு கழகத்திற்கு ஆதரவு திரட்டினர்.

கம்பம் செல்வேந்திரன் அவர்கள் பேசுகையில், “பெண்களுக்கு அளித்து வரும் மாதம் ரூ.1000 என்பது உதவி தொகை அல்ல அது மகளிரின் உரிமைத் தொகை என குறிப்பிட்டவர், ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டில் ‘ஒரு கண்ணில் வெண்ணை மறு கண்ணில் சுண்ணாம்பு’ தடவி நம்மை வஞ்சித்து வருகிறது என சாடினார்.

கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள் “ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தும்



“All roads lead to Anna Arivalayam” என்று எழுதுகின்றன என குறிப்பிட்டார்.

மேலும் “2022 - 2025 வரை 27,50,000 EPFO கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. 27 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதற்கு இதுவே சாட்சி” என எடுத்துரைத்தார். அதோடு அ.தி.மு.க. முழுமையாக பா.ஜ.க.வில் கரைந்து கொண்டு இருப்பதாகவும் விமர்சித்து பேசினார்.

குளித்தலையில் பேசிய ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள் “பல ஆண்டுகளுக்கு முன்பு நரேந்திர மோடி அவர்கள் ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் செலுத்துவோம் என்று கூறி மக்களை ஏமாற்றினார்.

ஆனால் எந்தவித அறிவிப்பும் இன்றி நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய பா.ஜ.க.வின் சதியை முறியடித்து ஒரே இரவில் 1.31 கோடி மக்களுக்கு 5,000 ரூபாயை அள்ளி வழங்கினார்” என்பதை குறிப்பிட்டவர், “அதிகார சக்திகளுக்கு எதிராக தைரியமாக குரல் கொடுத்து நிற்கும் ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே” என அழுத்தமாக பதிவு செய்தார்.

ஒவ்வொரு கூட்டத்திலும் நமது வளர்ச்சியை, நலத்திட்டங்களை தடுத்து வீழ்ச்சியில் தள்ள வரும் டெல்லி டப்பா எஞ்சினை விரட்டுவோம்.

தமிழ்நாட்டை என்றும் தலைகுனிய விடமாட்டோம் என உறுதி எடுக்கப் பட்டது.

பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவோடு வெற்றிப் பரப்புரையாக மாறி உள்ளது ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை.

---



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு சோலாரில் கோகுல் சீனிவாசன், செல்வகுமரன் ஆகியோர் ஏற்பாட்டில் “பிக்கிள் பால்” விளையாட்டு மைதானம் மற்றும் மினி ஹால் ஆகியவற்றை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன், கிங் பூபதி, அரச்சலூர் மகேஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## எழும்பூர் தெற்குப் பகுதியில் மகளிருக்கான ஐவர் கால்பந்தாட்ட போட்டி!

சென்னை, மார்ச் 4-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா-2026 மனிதநேயம் - 22 காலத்தை வெல்லும் காலாட்படை! கழகத் தலைவரின் சொல்லே விடை! மகளிருக்கான ஐவர் கால்பந்தாட்ட போட்டி மற்றும் பரிசு வழங்கல் நிகழ்ச்சி 28.2.2026 - சனிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு எழும்பூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் - முன்னாள் தமிழ்நாடு கால்பந்தாட்ட வீரர் டி.வி.வேலு தலைமை வகித்தார். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் - தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் - சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி., வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ். எம்.நாதன், புனிதவதி எத்திராசன், பா. ஸ்ரீராமுலு, பரிதி இளம் சுருதி, வே.உமாகாந்த், எஸ்.மணிமுடி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில்விஜய், அ.நிர்மலாதேவி, கோ.மணி, ஃபாத்திமா முசாஃபர் ம. அசோக்குமார், எஸ்.ரசூல், எம்.மலர்மாறன், கே. அன்ன பூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர்.பாபு (எ) சந்திரசேகர், வி.விஜயகுமார், எஸ்.டால்பின் ஹரி, இ. மொய்தீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் திரைக் கலைஞர்கள் நிழல்கள் ரவி, அசோக் செல்வன், சீனியர் இந்திய கால்பந்தாட்ட வீராங்கனை பி. மாரியம்மாள் ஆகியோர் பங்கேற்று முதல் பரிசு ரூ.30 ஆயிரமும் இரண்டாம் பரிசு ரூ.25 ஆயிரமும் மற்றும் பரிசு கோப்பைகளையும் வழங்கினர்.

இதில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., கே.எஸ். இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.எம்.யாழினி மற்றும் செ.பாலாஜி, க. வினோத், கோபி, ஜவுர் பாய், எம்.தில்லை குமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், சூளை சுப்பராயலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு மற்றும் சுகந்தி, மலர்கொடி, கவிதா, தேவயாணி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பித்தனர்.

எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன் ஆகியோர் நன்றி கூறினர்.




கோவையில் நடைபெற்ற தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுக் கூட்டத்தில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா, கழகச் செய்தி தொடர்புக்குழு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக மருத்துவ அணி செயலாளர் எழிலன் நாகநாதன், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, மகளிர் தொண்டரணி இணை செயலாளர் அ. தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் (ஓய்வு), கனவு தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் சம்பந்தம், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், கோவை வடக்கு, கோவை மாநகர் கோவை தெற்கு, நீலகிரி மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் ‘தமிழ்நாடு தலை குனியாது’ தேர்தல் பரப்புரைக் கூட்டம். தாதகாபட்டியில் நடைபெற்றது. பகுதி செயலாளர். ஏ. எஸ். சரவணன் வரவேற்று பேசினார். இக்கூட்டத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன் கலந்து கொண்டு பேசினார். மற்றும். மேற்கு மாவட்ட செயலாளர். டி.எம். செல்வகணபதி மாவட்ட நிர்வாகிகள். ஜி.கே. சுபாசு. திருநாவுக்கரசு, சி. ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர். இளங்கோவன். மாநகர நிர்வாகிகள். பா.ரகுபதி, ஷெரீப், ஆர்.பி. முருகன். சங்கீதா நீதி வர்மன், மண்டல குழு தலைவர். எம். அசோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.